படையிலே இந்தப் பிரச்னை இப்போது கட்டுக்கு அடங்கி இருக்கிறது. மேற்கொண்டும் நாம் காவல் துறையினுடைய சில பிரிவுகளை அனுப்பியிருக்கிறோம். அங்கே முழு பாதுகாப்புத் தரவேண்டும். அது மட்டுமில்லாமல் சில பல ரோந்துகளும் அவர்கள் வரவேண்டும் என்று உத்தரவிட்டு இருக்கிறோம். எங்கும் கலவரம் தீ வைப்பு நடைபெறக்கூடாது என்று முன் எச்சரிக்கையான வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொண்டிருப்பதன் காரணமாகவும், மாண்புமிகு உறுப்பினர்கள் நிலைமைகளை எல்லாம் தெளிவாக விளக்கியதன் காரணமாகவும் அரசு அதையும் உணர்ந்து தக்க நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆயத்தமாக இருப்பதன் காரணமாகவும், இதை ஒத்தி வைத்து விவாதிக்கவேண்டிய அவசியம் இல்லை என்று நான் கூறுகிறேன். இலக்கியத்திலே ஒன்று சொல்வார்கள். சொல்லிய வகையாக சொல்லவும் படுமென்று ஒரு இலக்கணம் உண்டு. அதற்கு உரை எழுதிய ஆசிரியர்கள் எல்லாம் சொல்லிய வகையால் சொல்லவும் படுமே என்பதற்காக சொல்லாத வகையாலே சொல்லவும் படுமே என்று விளக்கங்கள் எல்லாம் சொல்வார்கள். அதுமாதிரி ஒத்திவைப்பதன் மூலமாக உணர்த்தவும் படுமே என்றாலும் இதை ஒத்தி வைக்காது உணர்த்தலாம் என்ற அளவிற்கு எல்லோரும் விளக்கம் அளித்திருப்பதன் காரணமாக, அதை மேற்கொண்டு ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று கூறி, அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருவதன் காரணமாக சபையை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

[முற்பகல் 11–50]

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

6. தன்னிலை விளக்கம்.

குமரி மாவட்டம் அம்மாண்டி விளையிலுள்ள கயிறு ஆலை மூடல்

மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர்: பேரவை விதி 105-ன் கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் ஒரு விளக்கம் அளிப்பார்கள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை விதிகள்—விதி எண்: 54-ன் கீழ் நானும் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களான திரு. டி. மணி, திரு. எம். செல்லமுத்து ஆகியோரும் சேர்ந்து கன்னியாகுமரி மாவட்டம் அம்மாண்டிவிளையிலுள்ள கயிறு ஆலையை 4—9—82 முதல் நிர்வாகம் மூடிவிட்டனதால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள வேலையிழப்பை குறித்து ஒரு அறிவிப்ர-

1983 பிப்ரவரி 15] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

சமர்ப்பித்துள்ளோம். அதற்கு 31—1—83 அன்று தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை சட்டமன்றப் பேரவையில் கொடுத்துள்ளார்கள். அதில் ''24—1—83 அன்று போடப்பட்ட பேச்சுவார்த்தைக்கு நிர்வாகம் ஒத்திவைப்பு கோரியது, தொழிற்சங்கம் வரவில்லை'' என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

ஆனால் நெல்லை மாலை முரசு பத்திரிக்கையில் 'நிர்வாகம் ஒத்திவைப்பு கோரியது' எனபதற்கு பதிலாக, 'நிர்வாகம் ஒத்துழைப்பு கோரியது' என்று திருத்தி பிரசுரிக்கப்பட்டது. வானொலியும் ஒலிபெருக்கிய நேரத்தில் 'தொழிற்சங்கம் வரவில்லை' என்று மட்டும் தான் எடுத்துச்சொன்னார்கள். இந்தச் செய்தியை வானொலி வழியாகவும், பத்திரிக்கை வழியாகவும் தெரிந்துகொண்டவர்களுக்கு இடையில் இந்தப்பிரச்சினை காலதாமதம் ஏற்படுவதற்கும், ஒரு முடிவு ஏற்படாமலிருப்பதற்கும் தொழிற்சங்கம் பேச்சுவார்த்தைக்கு வரவில்லை என்ற பிரச்சாரம் ஒரு தவறான எண்ணத்தை தொழிலாளர்கள் கருத ஏதுவாயிற்று. அந்த தொழிற்சங்கத்தினுடைய தலைவர் என்ற முறையில் பலர் என்னிடம் இது பற்றி விசாரித்தார்கள்.

17—12—82 அன்று நடந்த பேச்சுவார்த்தையில் ஆலையை திறப்பதற்கு நிர்வாகம் சமர்ப்பிக்கும் நிபந்தனைகளை அடுத்த பேச்சு வார்த்தைக்கு முன்னால் தொழிற்சங்கத்திற்கு கொடுக்கலாம் என்று ஒத்துக்கொள்ளப்பட்டது. 24—1—83 அன்று அடுத்தபேச்சுவார்த்தைக்கான கடிதம் பெறப்பட்டது. நிர்வாகத்திடமிருந்து தஸ்தாவேஜுகள் கிடைக்காததால் 22—1—83 அன்றே நாகர்கோவிலில் நிர்வாகத்துடன் தொழிற்சங்கம் தொடர்பு கொண்ட நேரத்தில் 24—1—83 பேச்சுவார்த்தைக்கு அவர்கள் வரவில்லை என்றும் வாய்தா கேட்பதாகவும் தெரிவித்தார்கள். இருப்பினும் 24—1—83 அன்று சங்கத்தினுடைய தலைவர் என்ற முறையில் நான் தொழிலாளர் துறை ஆணையர் அலுவலகத்திற்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டேன். சம்பந்தப்பட்ட செக்ஷன் ஹெட்டிடம் பேசியபோது நிர்வாகத்தால்வாய்தா கேட்கப்பட்டுள்ளது என்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டது. நிர்வாகம் வாய்தா கேட்டிருப்பதினால் பேச்சுவார்த்தை நடக்க இயலாத நிலை ஏற்பட்டது.

ஆகவே, தொழிற்சங்கம் வரவில்லை என்று குறிப்பிடுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படி ஒரு தன்னிலை விளக்கத்தை பேரவையில் சமர்ப்பிக்க வாய்ப்பு அளித்ததற்கு பேரவைத் தலைவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.